Regd. No, M

விலை அணு 1

# முரசொலி

ஆசிரியர் மு. கருணாநிதி.

''துடுக்குமிகக் கொண்டவையும்
துணிவுமிக்க ஆரியந்தான்
அடுக்குச்சொல் அண்ணுவால்
அலறித்தான் சாகுதடா!''

தி. வ. மெய்கண்டார்

முரசு 1] திருவாரூர். பெரியார் ஆண்டு 69, தை 15. (28-1-48) புதன்கிழமை [ஒலி 3



## இனமுழக்கம்

(சேரன்)

கோவலனையே என் நெஞ்சாரக் காதலித்தேன். கணிகையர் குலத்தில் தான் பிறந்தேன். ஆனல் வேசியாக வாழ விரும்பவில்லை. விஷங்கலவாத நீரோடை என் காதல். என் காதலைப் பாலைவனமாக்கி என் கருத்தில் நுழைந்த கட்டழகரைப் பாண்டியன் பலியிட்டான். அவர்மேல் எனக்கிருந்த அன்பு என்னைத் துறவியாக்கிற்று.

ஆனல் தமிழ்ப் பெண்ணைக் கேளுங்கள்! ''காதலிற் சிறந்தவளுக்கு ஒரு உதாரணம் கொடு'' என்று!

என்னை வேசி, விபசாரி என்று வசைமாரி பொழிந்து நாடகம் நடத்துவார்கள்...சிலப்பதிகாரம் தெரியாதவர்கள் சிந்தனையற்றவர்கள்......!

காதலுக்கு உதாரணம் இந்திரனைக் கூடிய கௌதமரிஷி மனைவி அகலியாவும், சந்திரனைக் காமுற்ற பிரகஸ்பதி முனிவர் பத்தினி தாரையும் என்று...... கதை கூறுவார்கள்......காதலுக்காக வாழ்வையே தியாகம் செய்த என்னைச் சொல்லமாட்டார்கள்!

காரணம் என்ன? மாதவி.

என் காதலன் மதுரைக் காவலனல் கொல்லப்பட்டார் என்று கேட்டு.........மன்னனை நீதி கேட்டு, அம் மணிமுடியோன் தன் தவறையுணர்ந்து மாளச் செய்து, மதுரை மாநகரையே சாம்பலாக்கப் புறப்பட்டேன். என் மணாளனோடு இறப்புலகில் இன்பங்காண எண்ணினேன். நான்மட்டுமா.....பூதப் பாண்டியன் தேவி, தன் கணவன் இறந்ததும் தானும் தீயில் இறங்கினுள். தீ அவளுக்குத் தாமரைப் பொய்கைபோலிருந்ததாம்.

ஆனல் தமிழச்சியைக் கேளுங்கள் ''கற்புக்குப் பேர்போனவள் யாரம்மா?'' என்று!

என்னைச் சொல்லமாட்டாள்—ஐவரை மணந்து ஆறுவது புருடனை மாலையிட எண்ணிய திரௌபதியை அழியாத பத்தினி என்பாள்.

காரணம் என்ன? கண்ணகி.

என் சகோதரன் செங்குட்டுவன்தான் சேரநாட்டு மகுடத்துக்கு உரியவன். ஒருநாள் கொலு மண்டபத்தில் ஒரு ஆருடக்காரன் நுழைந்தான். அவன், அண்ணனுக்கு முடி கிடைக்காது தம்பிக்குத் தான் அந்த அதிர்ஷ்டம் என்று புளுகினன். செங்குட்டுவன் முகத்திலே மாறுதல் படர்வதை நான் கண்டேன், ''எனக்கு ஆட்சியா? இல்லை...... இல்லை.........இந்த ஜோஸ்யத்தைப் பொய்யாக்குகிறேன்'' என சபதம் ஒலித்து உடனே துறவறம் பூண்டேன். அண்ணனையே அரியணையில் அமர்த்தி அகமகிழ்ந்தேன், இது நான் சகோதரனுக்காக செய்த தியாகம்.

ஆனல் தமிழனைக் கேளுங்கள்; ''சகோதர வாஞ்சையுள்ள ஒருவன் பெயரைச் சொல்ல முடியுமா?'' என்று! உடனே பதில்வரும், 'இராமன் தம்பி பரதன்' என்று! என் பெயரும் நான் தந்த சிலப்பதிகாரமும் தமிழனுக்கு சரியாகத்தெரியாது,

காரணம் என்ன?

இளங்கோவடிகள்

(6-ம் பக்கம் பார்க்க

திருவாரூர் பிரபாத்தில் 28—1—48 முதல் மிஸ் மாலினி 3-வது வாரம்

# நல்ல தீர்ப்புதான்!......ஆனால்?

(P.V. லிங்கம்,)

டுமிசி! தணிகாசல முதலியாரின் படுக்கையறைக்குள் தான் துப்பாக்கி சப்தம் கேட்டது. வழக்கம்போல் அவருக்குப் பால் கொண்டு போகும் துரைசாமி தான் உள்ளே நுழைந்தான். அங்கு நடந்தது யாருக்குத் தெரியும்? ஆனால் அறைக்குள் நடந்தது என்றோ ஒருநாள் அம்பலத்திற்கு வந்துதானே தீரும். சம்பவம் நடந்து ஒரு ஆண்டு மறைந்து போயிற்று.

தர்மகர்த்தா தணிகாசல முதலியாரின் மகன் சுந்தரத்தை, கொலை செய்தாள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கூண்டிலே நிறுத்தப் பட்டிருந்தாள் துரைசாமியின் மனைவி செல்லம்மாள்.

சுந்தரத்தைக் கொலை செய்ததாக உன்மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றத்திற்கு நீ என்ன சொல்கிறாய் எனக் கேட்டார் நீதிபதி.

அமைதி நிலவிய நீதி மன்றத்திலே செல்லம்மாள் பேச ஆரம்பித்தாள்.

என் வாக்குமூலத்தோடு என் வாழ்வையும் இணைத்துத்தான் சொல்லவேண்டும். தாய் தந்தையரை இழந்து தாயைப்பெற்ற பாட்டியின் பராமரிப்பில் இருந்த நான் வறுமையிலே வாடினேன். பெயர்தான் செல்லம்மா......... எப்படியோ எனக்குத திருமணமும் நடந்தது. என்னை மணந்து கொள்ள வருபவர்..... மாளிகையில் வாழும் மகாராஜாவாகவா இருப்பார். என்னைப்போல ஏழ்மையிலே உழன்ற ஒருவர் தான்......எனக்குக் கணவராக வந்தார். அவர் சீமான் மகனல்ல என்றாலும் அவரை அடைந்த மகிழ்ச்சியால் நான் என்னை ஒரு சீமாட்டியாக நினைத்துக்கொண்டேன். தர்மகர்த்தா தணிகாசல முதலியார் வீட்டில் அவர் ஒரு சாதாரண வேலைக்காரர். நன்றாகப் படித்துமிருந்தார். அய்யர்கள் ஆதிக்கம் பெற்ற அரசியல் துறையில் அவர் கல்வி அறிவுக்கு மதிப்பு கிடைக்கவில்லை. அவர் தணிகாசல முதலியாரின் அடிமையாகக் காலங்கழிக்க நேர்ந்தது. அப்படி ஒரு சர்க்கார் வேலை கிடைத்தால் தான் என்ன...... மாடமாளிகையிலா வாழப்போகிறோம்...ஒரு ஸ்ட்ரைக் வந்தாலும் போச்சு......பழிவாங்குகிற பட்டியலில் சேர்த்து விடுவார்கள். ஆனால் கொஞ்சம் வெளியிலே கௌரவம் இருந்திருக்கும். விதியை நினைத்து வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தோம். வருடக்கணக்கிலா? இல்லை....ஆறு முழுமாதங்கள்! ......இதற்கிடையில் என் பாட்டியும் என்னைவிட்டுப் பிரிந்தாள்.

அன்று காலை "காலச்சக்கரம் ......ஏழைகள் பக்கமும் சுற்றும். கவலைப்படாதே செல்லம்மா!" என்று கூறிக்கொண்டே.......... என் கண்ணீரைத் துடைத்துவிட்டு, கஞ்சியைக் குடித்தார் என் கணவர். பிறகு, வழக்கம் போல் வேலைக்குப் புறப்பட்டார். நானும் வழக்கம் போலவே அவர் தெருக்கோடி திரும்பும் வரையில திண்ணையில் நின்று பார்த்துவிட்டு உள்ளே சென்றேன். என் ஆசை அத்தானை நான் பார்த்தது அதுதான் கடைசிதடவை.

வேலைக்குச் சென்ற என் அத்தான் மூன்று நாட்களாக வீட்டுக்கு வரவில்லை. 'வாலிபப் பெண் வெளியில் வரக்கூடாது, என்ற என் பாட்டியின் பழைய உத்திரவுகள் நினைவுக்கு வந்தாலுங்கூட என்னையறியாமலேயே என் துடிதுடிப்பு என்னை முதலியார் வீட்டுக்கு இழுத்துச் சென்றது.

'அய்யா உள்ளேவா அனுமதி கொடுத்துவிட்டார்' என்று வேலைக்காரி கூறியதும் நான் சென்றேன். முதலியார் ஊஞ்சலாடிக்கொண்டிருந்தார். ஒரு நாய்க்குட்டி அவர் முகத்தை நக்கி விளையாடிக் கொண்டிருந்தது. கூடத்துப் பெரிய அலமாரியில் பார்வதி பரமேஸ்வரன் படங்கள் சாம்பிராணி தூபங்களோடு காட்சியளித்துக் கொண்டிருந்தன. நான் முதலியார் வாயசைவை எதிர்பார்த்து நின்றேன்.

"உன் கணவனுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்து உனக்குத் தெரியுமா?" என்றார். திடுக்கிட்டேன் 'அப்படி என்ன ஆபத்து?' என்று கேட்டேன்.

"ஈஸ்வரன்கோயிலில் திருட்டு நடந்ததே உனக்குத் தெரியுமா?" என்றார். எனக்கு பாதி உயிர் போய்விட்டது அழுதுவிட்டேன் குழந்தையைப்போல்.

'அவரை நான் பார்க்க வேண்டும்' என்று அலறினேன்

"பார்க்க முடியாது, அவனைக் கைது செய்ய போலீஸ் தேடிக் கொண்டிருக்கிறது. அவனை வெகு ஜாக்ரதையாக சிங்கப்பூர் அனுப்பிவிட்டேன். கேசை உடைத்தெறிந்துவிட்டு உன் புருஷனை உன்னிடம் சேர்க்கிறேன் பயப்படாதே." எனத் தேற்றினார்.

நான் தேம்பித் தேம்பி அழுதேன். "விஷயம் பரமரகசியம். யாரிடமும் உதட்டைக் கூட அசைக்காதே" என்று உஷார் படுத்தினார்.

(7-ம் பக்கம் பார்க்க)

## இனமுழக்கம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

“என் நண்பன் சோழ மன்னனை நான் நேரில் பார்த்தது கூட இல்லை. ஆனால் அறிவின் சிறப்பு எங்களைத் தோழர்களாக்கிற்று, மன்னன் இறந்தான் என்ற செய்தி என் செவியைத் தொடுவதற்குள் நான் மாண்டுவிட்டேன்.

ஆனால் தமிழனைக் கேளுங்கள்; ‘நட்புக்கு யாரப்பா நல்ல உதாரணம்?’ என்று! என்னைச் சொல்ல மாட்டான்—இராமாயணத்து குகன், விபீஷணன், சுக்ரீவன் ஆகியவர்கள்தான் அவன் நினைவுக்கு வருவார்கள்.

காரணம் என்ன?”

புலவர் பிசிராந்தையார்.

●

நானும், பட்டினத்தாரும், தாயுமானாரும், பதினெட்டு சித்தரும் எவ்வளவோ பாடிப்பார்த்தோம் இந்தப் பாழ்பட்ட நாட்டைப் பண்படுத்த! நாங்கள் பட்ட தொல்லைகள் கொஞ்சமல்ல. என்னை ஒரு அறையிலே தள்ளிக் கொன்று.........அருட்பெருஞ் சோதியிலே ஐக்யமாகி விட்டதாக அறியாத மக்களிடம் அறிவித்துவிட்டனர். இவ்வளவு அல்லலுற்றோமே......... ஆனால் தமிழனைக் கேட்டுப்பாருங்கள்; ‘உன் நாட்டில் சமரச கீதம் பாடியவர்கள் யாரய்யா?” என்று! நாங்கள் அவன் நெஞ்சில் இடம் பெற மாட்டோம்.

ஆனால் சாதாரண சாயிபாபா அவன் நெஞ்சில் மட்டுமல்ல... பொத்தானாக, மோதிரமாக அவன் உடலிலும் இடம் பெறுவார்.

காரணம் என்ன?

வடலூர் இராமலிங்கம்.

“கர்வத்தால் கனத்துப்போன கனக விசயர் தலைகளில் கல்லேற்றி இமயத்தில் கொடி பொறித்து, இந்நாட்டு புகழ் பெருக்கி வந்தேன். தமிழர் வீரத்தைத் தரணிக்கு எடுத்துக் காட்டினேன்.

ஆனால் தமிழனைக் கேளுங்கள்; ”வீரத்திற்கு சான்று யார்?” என்று! என்னை மறந்துவிடுவான், மறைந்திருந்து வாலியைக் கொன்ற மகாவிஷ்ணுவின் அவதாரம் இராமபிரான் என்று வர்ணிப்பான்.

காரணம் என்ன?”

சேரன் செங்குட்டுவன்.

●

உலகுசெழிக்க—வாழ்வு உயர—அல்லல் மாள—அவதி நீங்க—அரும்பாடு பட்டு ஆயிரத்து முன்னூற்றி முப்பது அருங்குறட்பாக்கள் அளித்தேனே...

ஆனால் தமிழனிடம், “வாழ்வு ஓங்க வழி வகுத்தவன் யார்?” என்று வினவுங்கள். பகவத் கீதையைத்தான் கண்ணன் காட்டிய வழி என்று உங்களிடம் காட்டுவான்.

காரணம் என்ன?

திருவள்ளுவர்.

●

ஒருநாள்......மாலை நேரம்... தேரில்சென்றுகொண்டிருந்தேன்..........சிரித்த முல்லைக்கொடியொன்று தழுவிப்படரக் கொம்பில்லாமல் தவித்தது. என் தேரை நிறுத்தி அதன் தூணில் அதைப் படரவிட்டு..........கால் நடையாக அரண்மனை திரும்பினேன்.

புலவர்களுக்கெல்லாம் பொன்னும் மணியும் அள்ளிக்கொடுத்தேன்.

ஆனால் தமிழனைப் பார்த்து “தம்பி! கொடைவள்ளல் ஒருவன் பெயரைக்குறிப்பிடு” என்று கேட்டுப்பாருங்கள்; என் பண்பே அவனுக்குத் தெரியாது... ‘கொடைக்கு கர்ணமகாராஜா” என்பான்.

காரணம் என்ன?

பாரிவள்ளல்.

●

காரணம் என்ன?...அத்தனை பேரும் கேட்கிறார்கள் காரணம் என்ன என்று!.........

காமராஜ் நாடார் தனக்குத் தெரியாது என்கிறார். கிராமணியார் தெரிந்தும், காரணம் சொல்ல மறுக்கிறார்,

இதோ காரணம் சொல்கிறான் கறுப்புச் சட்டைக்காரன்......

‘‘வள்ளுவரே! வடலூர் இராமலிங்கரே! வாளுக்கஞ்சா வீர செங்குட்டுவரே! வள்ளல் பாரியே! மாதவியே! கண்ணகியே!.........நீங்கள் போற்றப் படவில்லை.........காரணம்; நீங்கள் திராவிட இனம். அவர்கள் போற்றப் படுகிறார்கள்......காரணம்; அவர்கள் ஆரிய இனம்.”

“திராவிடன் திராவிடனைப் போற்றாத அளவுக்கு மானமிழந்து விட்டானா?” இப்படித் திருவள்ளுவர் கேட்கிறார் சோகமாக!

“இந்நிலை மாறாதா?” என கண்ணீர் விடுகிறாள் கண்ணகி.

“மாறும்...... அதற்குத்தான் நாட்டில் இன முழக்கம் நடைபெறுகிறது” என்று ஆறுதல் வார்த்தை பேசுகிறான் உறுதியொளிவீசும் கண்களோடு கறுப்புடைக்காரன்!

———

குடந்தை தூக்குமேடை நாடகத்தை முன்னிட்டு 4-2-48ல் வெளிவர வேண்டிய முரசொலி 6-2-48ல் வெளிவரும் (நிர்வாகி.


# முரசொலி

திருவாரூர்.

பெரியார் ஆண்டு 69. தை 15.
புதன் 28—1—48.


## விசுவநாத கிராமணியார்.

கந்தசாமி கதாநாயகன்—லீலாவதி கதாநாயகி—கதைக்குப் பெயர் கந்தலீலா.

கமலாவும் கோபாலும் காதலித்து கடைசியில் சாகிறார்கள்; நாடகத்திற்குப் பெயர் கமலகோபால்.

சந்திராவும் காந்தாவும் சகோதரிகள் படத்திற்குப் பெயர் சந்திரகாந்தா.

"விசுவநாத கிராமணி"யாரும் அப்படித்தான். அர்த்தநாரீஸ்வரர், ஆண்பாதி பெண்பாதி என்பார்கள். விசுவநாத கிராமணியார் ஆண் பெண் இணைப்பு அல்ல! அரசியல் ஒட்டுவேலை. நாம் செய்ததல்ல...நாம் காணுவது! விசுவநாதத்தையும் கிராமணியாரையும் தனித்தனியே காண்பதைவிட ஒரு தலையங்கத்தில் 'தரிசிப்'பது, அவர்கள் எழுத்தையும் பேச்சையும் நம்பி இனத்துரோகப் 'பாபம்' செய்த தோழர்களுக்கு 'விமோசனம்' அளிக்கும் என்பதற்காகவே!

"உனைக்கண்டு மயங்காத பேர்களுண்டோ?" என்பதை பாகவதர் பாடும்போது அந்த இசையிலே மயங்கியவர்கள் எத்தனை யோபேர் !......அதையே நானும் பாடுகிறேன் என்று இசையை விலைகேட்கும் ஒருவன் இஷ்டம் போல் மெட்டமைத்துக் கத்தினால்........விளைவைச் சொல்ல வேண்டுமா?

'தமிழ்நாடு தமிழருக்கே' என்பது பெரியார் தமிழருக்குத்தந்த எழுச்சி இசை!

'தமிழ்நாடு தமிழருக்கே' என்று திருச்சி மணிபக்காரத் தெருவிலும், சென்னை இருசப்ப கிராமணித் தெருவிலும் கிளம்புகின்ற கீதம் ஒருகாலத்தில் பெரியார் பாடிய பழைய கீதம்! அதை இன்று பாடுபவர்கள்....மெட்டு தெரியாதவர்கள்—இசை நுட்பம் அறியாதவர்கள்—சாரீரம் இல்லாதவர்கள்—தாளம் புரியாதவர்கள் —

பார்ப்பனீயப் புண்ணும், பல கடவுள்வாதமும்,வைதீகவயிற்றுவலியும், வடநாட்டுக் காய்ச்சலும், இந்திக்குஷ்டமும், புராணரோகமும், மதப்புரையும் திராவிடனை வாட்டுவதறிந்தபெரியார் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற மருந்தைசென்னைக் கடற்கரையிலே தந்தார். மருந்தை சாப்பிட அன்றுமறுத்தவர்கிராமணியார்.

வியாதியின்வேகம் வைக்கத்து வைத்தியர் தந்த சூரணத்தால் திராவிடருக்கு குறைந்த அதே நேரத்தில் கிராமணியாருக்கு முற்ற ஆரம்பித்தது. காரணம் மருந்தை மதிக்கவில்லை. அப்பொழுதெல்லாம் "மேட் இன் நார்த் இண்டியா," லேபிள் மருந்துப் புட்டியில் இருக்கிறதா என்று பார்ப்பவர் கிராமணியார்.

தோழர் விசுவநாதம் பெரியார் தந்த மருந்தில் குணம் காணும் பொழுதே......தானே வைத்தியராகிவிட எண்ணினவர். மருந்து தயாரிக்க புடம் போட்டவர். பெரியார் தந்த மருந்தால் திராவிடன் மரணப் படுக்கையை விட்டு எழுந்தானே தவிர நோய் முற்றிலும் பறந்துவிடவில்லை.

"சூரணத்தில் கொஞ்சம் காரசாரம் தேவை.........காரசாரத்திற்கேற்ற பச்சிலை கண்டுபிடித்துவிட்டேன்...... அழுகிப்போன திராவிடனின் மேனி மெருகேற இதோ புதிய மருந்து" எனக் காட்டினார் தலைவர். 'திராவிட நாடு திராவிடருக்கே' என்பது அது!

வைத்தியசாலையில் 'கம்பவுண்டரா'யிருந்த விசுவநாதம், தான் கண்டிருந்த சில முறைகளோடு சுய வியாபாரம் செய்ய வெளியேறினார். தன் வியாதி தீராதவர்—'தீராத வினையெல்லாம் தீர்த்துவைப்பேன்'—என்று பண்டிதர் கூட்டத்தின் மதிப்புரைகளோடு 'தமிழர் நாடு' கம்பெனி தயாரிக்கும் அதியற்புதமருந்தை விளம்பரப்படுத்தினார்; விளம்பரப் படுத்துகிறார்.......!

மருந்தின் பெயர் 'தமிழ்நாடு தமிழருக்கே' தான்! மார்க்கெட்டில் தெரிந்த பெயர்; வியாபாரம் ஆகுமென்பதற்காக பெயர் மாற்றப்படவில்லை. மருந்தைப்பற்றிய குறிப்புகளில், மதநோயை இந்த மருந்து போக்காது; என்பதைத் தீட்டி நாணயமுள்ள நல்ல வியாபாரி என்பதைக் காட்டிக்கொண்டுள்ளார். 'புரையோடும் புண்ணய்யா மத வியாதி!...அதைப் போக்க உங்கள் மருந்து வேலை செய்யாதென்றால்......நாங்கள் மாண்டழிந்து விடுவோமே" என்று கேட்கும் பிணியாளனிடம் "டாக்டர்" விசுவநாதம் வாய் ஜாலம் பேசி மருந்தின் பெருமையை உயர்த்த மழுப்பல் வேலை நடத்துகிறார்.

இரண்டாவது மருந்துக்காரர் விசுவநாதத்தைப்போலஈரோட்டு வைத்தியசாலையில் வேலை பார்த்தவர் அல்ல. வைத்தியருமல்ல.....சாதாரண வியாபாரி. புதிதாக இப்போது மேற்கொண்

டுள்ளது மருந்து வியாபாரம். தயாரித்தவர் ராஜாஜி......விற்பவர்தான் கிராமணியார் என்று கூட வதந்தி உண்டு. கிராமணியார் மருந்து விற்பது நோய் தீர்க்க அல்ல; மற்ற மருந்துகளுக்குப் போட்டியிடும் முறையில்!

இந்தி எதிர்ப்பிலே தாளமுத்து நடராசன் பிணங்களைக் கண்டு கண்ணீர் விடாத கிராமணியார்—தாளமுத்து மனைவியாரின் தாலி அறுந்தது கண்டு கலங்காத கிராமணியார்—திருச்சியிலே புறப்பட்டு......சென்னையிலே முற்றுகையிட்ட தமிழர் பட்டாளத்தின் முரசங்கேட்டு உணர்ச்சி பெறாத கிராமணியார்— தள்ளாத வயதிலே வெண்தாடி வேந்தன் பெரியார் ராமசாமி பல்லாரி சிறையிலே தள்ளப்பட்டது கண்டு திடுக்கிடாத கிராமணியார்—இன்று இந்தி எதிர்ப்புக் குளிகையும், தமிழர்எழுச்சிமாத்திரையும் தருவதின் கருத்தென்ன? இராமனிடத்திலே சரணடைந்த விபீஷணன் திரும்பிவந்து இராவணன் நலத்திற்கு பாடுபடுவதாகச் சொன்னால்......படைவீரர் என்ன பத்தாம் பசலிகளா நம்புவதற்கு! அதைப் போலத்தானிருக்கிறது கிராமணியாரின் முழக்கம். முழக்கத்திலே பெருஞ்சப்தம் இருக்கிறது...... ஆனால் சிங்கக்குரல் இல்லை. காரணம்; நரிகள நடத்தும் நாடகம்! இந்த நாடகம் நாம் தேவையில்லை என்கிறோம். கிராமணியார் வசூலுக்காக நடத்துகிறார்; நம் யோசனை அவருக்கு வேம்பாகத் தெரிகிறது.

தமிழ்—தமிழர்—தமிழ் அரசு ......கிராமணியாரின் சுருதி வீழ்ந்த கீதம்!

வேங்கடமும் குமரியும் எல்லையென வகுக்கிற கிராமணியார்... பனிரெண்டாம் நூற்றாண்டிலேயிருந்த சேர, சோழ, பாண்டியர் நாட்டின் எல்லையைக் குறைக்கிறார்—குலைக்கிறார்— இந்தக் குற்றச்சாட்டு மட்டுமல்ல; "சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழ் அரசு" என்று கொட்டுகிறாரே முரசம்; அது 'பாம்புப் புற்றிலே தவளைக்கூட்டம்' என்பது போலிருக்கிறது.

சுதந்திர இந்தியாவிலே........ மற்றொரு சுதந்திரம் கோரும் நிலை ஏன் ஏற்பட்டது என்பதை கிராமணியார் சிந்திக்காமலில்லை ......ஆனால் வெளியில் சொல்ல மாட்டார்....அவர் போட்டிருப்பது வேஷந்தானே—அதனால்!

சுதந்திர இந்தியா என்பதைக் கிராமணியார் மறந்தால்— அசோகர் கொடியை மறக்க வேண்டும்—அந்தராத்மா லீலைகளை மறக்க வேண்டும்—அதற்காகவே 'சுதந்திர இந்தியா'வை சோஷலிசத் தமிழரசுப் புராணத்திற்குப் பாயிரமாக அமைத்துக் கொண்டார். பூனைக்குப் பயந்தவன் புலியைக் கொன்று அதன் பல்லால் தாலிசெய்து கட்டுகிறேன்என்று ஆள் உரைப்பதும்—சொத்தும் சுகமும்வைத்துக்கொண்டு சொகுசுகுலையாமல் கோயில் கொண்டுள்ள கல் முதலாளிகள் பக்கம் கண் திருப்பவே அஞ்சுகிற தோழர்கள் கம்யூனிசம் சோஷலிசம் பேசுவதும் முரண்பாடு கொண்டதல்ல.

இன்று இந்த நாட்டிலே சோஷலிசம் கம்யூனிசம் பேசுகின்ற தோழர்கள் வானத்தைக் கீறி வழி காட்டுவதாக கூறுவார்கள். ஆனால்....இவர்கள் கூரையேறி குருவி பிடிக்காத குருக்கள்கள் என்பது திராவிடர் கழகத்தின் தீர்ப்பு.

"தமிழ்நாடு தமிழருக்கே என்றுதானே ஒலிக்கிறார் கிராமணியார்; ஏனப்பா அவரை எதிர்க்கிறாய்?" என்று கேட்பாரும் உளர்! தூங்கும் போது கழுத்தை நெறிக்கக் காத்திருப்பவன் கூட துளசிமாலை அணிந்து 'துவாரகநாதா' என்று துதித்துக் கொண்டிருப்பதுண்டு. இந்த ரகத்தில் சேர்க்கப்பட வேண்டியவர் கிராமணியார்.

திராவிட சமுதாயத்தின் கலை, நாகரீகங்களை சல்லடைக் கண்களாக்குவதற்கு எந்த ஒரு ஆரியம் காரணமாயிருந்ததோ அந்த ஆரியத்தையும் சேர்த்துச் சொல்கிறார் தமிழர் என்று! நீர் என்றதும் சாக்கடை நீரும் நீர்தான் என்று வாதிப்பது போல வகுத்துக்கொண்ட திட்டமது! மழலைமொழி கேட்க மக்கள் தேவை என்கிற திராவிடன் குறிக்கோளும் 'புத்' என்ற நரகத்திலிருந்து விடுபட புத்திரன் தேவை......புருஷனுக்கு இல்லாவிட்டாலும் வேறு யாருக்காவது பிறந்தாலும் சரி என்கிற ஆரியக் கொள்கையும் எடுத்துக் காட்டாக நிற்கவில்லையா திராவிடர் வேறு ஆரியம் வேறு என்பதற்கு! ஏன்? இன்றைய அரசியல் நிலை சொல்லவில்லையா ஆரியம் வேறு திராவிடம் வேறு என்று! தெரிந்திருந்தும் கிராமணியார் ஆரியர்—திராவிடர் பிரச்சினை அர்த்தமற்றது என்ற பழைய பல்லவியே பாடுவதின் மர்மமென்ன? விசுவகாதம் புரிந்துகொண்டிருக்கிற அளவுகூட கிராமணியாருக்குப் புரியவில்லை என்பது பதிலல்ல.........கிராமணியார் திராவிடர் கழகத்தின் வேகத்திற்கு வேலிபோட முனைகிறார் என்பதுதான் நல்ல பதில். 'தமிழ்நாடு தமிழருக்கே' கிராமணியாருக்கும் விசுவகாதத்திற்கும் கிடைத்த போர்வை. அதில் புகுந்துகொண்டு கிராமணியார் தன் செல்வாக்கை உயர்த்தி தமிழ்நாடு காங்கிரசைக் கைப்பற்றத் திட்டம் போடுகிறார். அந்த அஸ்திவாரம் கோவை

மாநாட்டுத் தலைமைச் சண்டை என்பதை அவரே மறுக்கமாட்டார். திராவிடர் கழகத்து இளைஞர்களை மையலூட்டி மயக்க தமிழ்—தமிழர்—தமிழரசு—தமிழ்க்கொடி என்ற ஆடையாபரண அலங்காரங்களோடு கிராமணியாரின் கேளிக்கை!

அதே சமயத்தில் என்னை ஏமாற்றி விட்டாயா கள்ளி என்று கனல் தெரிக்கப் பேசும் காங்கிரஸ் கணவனின் சினத்தைத் தணிக்க......"தர்மசக்கரக் கொடியும் பறக்கும், சுதந்திர இந்தியக் கூட்டரசும் அமையும்" என்ற புரியாத கொஞ்சு மொழிகள்!

கம்யூனிஸ்ட் வாலிபர்களுக்கு வலைவிரிக்க கொடியிலே சிகப்பு வர்ணம்!

இந்தப் போலித் தமிழரசியின் சரசத்தில் சிக்கியவர் சரிந்துபோன திராவிடத்திற்கு சரியான தொண்டராக மாட்டார். வடவர்க்கு வால் பிடிப்போராக—மத்திய சர்க்காரிடம் மண்டியிடுவோராக—மத வெறியர்களாக ஆகும் நாசநிலை திராவிடர்க்கு ஏற்படும். வேண்டாம் இந்த மோசமென கிராமணியாருக்கு நாம் கூறவில்லை......எல்லாம் வேஷமென எங்நாட்டுத் திராவிடர்க்குக் கூறுகிறோம்.

போர்வையில் புகுந்துள்ள மற்றொரு தோழர் விசுவநாதம் போர்வைக் குள்ளிருந்தே பூச்சாண்டி காட்டுகிறார். "தமிழர் என்போர் பித்தலாட்டக் கருங்காலிகளே என்றும் தமிழர், தமிழரசு என்பது ஒன்று அறியாமையாக இருக்கவேண்டும் அல்லது பித்தலாட்டமாக இருக்க வேண்டும், இவர்களைக் கருங்காலிகள் என்றே கூறுவேன்' என்று பெரியார் அவர்கள் துணிந்து இழித்துக் கூறி, இது நான்காவது வாரம்!" என்று நினைவுபடுத்துகிறார் பயமுறுத்தல் கலந்து! இதுவும் பெரியார் தந்த பழைய மெட்டு. "சென்னை சரணாகதி மந்திரிகள் இன்னும் எத்தனை நாள்? இன்றைக்கு நூறுவது நாள்" என்ற விடுதலை எச்சரிக்கை! ..விசுவநாதம் நம் பாசறையிலிருந்து விலகியவரல்லவா? அதே வேகத்தில் பாடுகிறார். பாடட்டும். பாடும் போது கொஞ்சம் பகுத்தறிவுக்கும் வேலை தாட்டும். திருவாரூர் மாநாட்டிலே திராவிடத்தின் தந்தையை பெரியார் என்று அழைக்க மறுத்து ..... கடைசியில் பெரியார் பெரியார் என்று பலமுறை கூறிய பிறகே வேறு வார்த்தைபேச வாயசைக்கும் நிலை ஏற்பட்டு......இந்தக் குட்டை மறக்காமல் தன் பத்திரிகையிலே பெரியார் என்று எழுத, தவறியும் மறந்துவிடாத அதே அஞ்சா நெஞ்ச(?) விசுவநாதம் தான் அறிவிப்பு வழங்குகிறார்! இந்தி எதிர்ப்புப் போரில் சிறை செல்லாமலிருக்க சிபார்சு வைத்த அதே விசுவநாதந்தான் சிங்க நடையில் எச்சரிக்கை நீட்டுகிறார்.

விசுவநாதம் யார்? பெரியார் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை சிந்தித்தாரா? தமிழரைக் கருங்காலிகள் என்று தலைவர் கூறியிருந்தால் விசுவநாதம் தமிழரை நோக்கிக் கதறுவதில் அர்த்தமுண்டு. அதை விடுத்து ......தமிழர் என்போர், தமிழர், தமிழரசு என்பது பித்தலாட்டங்கள் என்று பெரியார் விசுவநாத கிராமணியாரை மனதில்வைதது என்போர் என்பது என்ற வார்த்தைகளை அளந்து போட்டிருக்கும் போது வக்காலத்து வாங்க விசுவநாதம் தமிழர்களைத் தட்டியெழுப்புவது......தெளிவு பிறக்காததாலா? அல்லது தெகிடுதத்த வேலையா? என்பது நமக்குப் புரியவில்லை.

இறுதியாக விசுவநாத கிராமணியாருக்கு நாம் விடுக்கும் செய்தி...... திராவிடர் கழகப் படை வீரர் எதிரிகளின் கோட்டையை முற்றுகையிடும் நேரமிது! உங்களை யறியாமலேயே நீங்கள் எதிரிகளின் கையாளாகி விடாதீர்கள்.

சரித்திரம் சான்றுகளோடு கூறுகிறது; ஆந்திரம் கன்னடம் மலையாளம் ஆரியத்தால் பிளக்கப்பட்டதே தவிர அனைத்தும் திராவிட இனத்தவர் நாடே என்று! நம் முன்னே நிற்பது மொழிப்பிரச்சினை மட்டுமல்ல! இனப்பிரச்சினை! இதை மனதில் கொள்க!

எதிரிகளின் கோட்டை தவிடுபொடியாகும் வேளையிலே...... சதிசெய்து எங்கள் படைவரிசையைக் குலைத்து விடாதீர்கள்! ..... முதலில் அன்பாக வேண்டுகிறோம்......... இந்த அன்பு, எச்சரிக்கையாக முளைத்து, அபாய அறிவிப்பாகமாறுவதற்குள் எங்கள் வேண்டுதலை செவிமடுத்துக் கேளுங்கள்!

## எழுதவில்லை

தோழர் ஜீவானந்தம் கடிதத்தை 'பேனாமுள்' இந்த வாரம் இடமின்மையால் எழுதவில்லை அடுத்த ஒலியில வரும்,

முரசொலி
புதன் வெளியீடு.

ஆண்டு சந்தா .... 4—0—0
தனிப் பிரதி .... 1 அணா

நிர்வாகி
முரசொலி அலுவலகம்,
திருவாரூர்.

## நல்ல தீர்ப்புதான்……

(2-ம் பக்க தொடர்ச்சி)

அத்தான் புத்தி ஏன் இப்படிப் போயிற்று என்று வருந்தியபடி வீடுவந்து சேர்ந்தேன்.

மாதாமாதம் தர்மகர்த்தா என் செலவுக்காக பத்து ரூபாய் கொடுத்து வந்தார். நாட்கள் உருண்டு கொண்டுதானிருந்தன. என் மனதிலே மட்டும் பெரிய புயல் வீசிக்கொண்டிருந்தது. தர்மகர்த்தா அடிக்கடி வந்து எனக்கு தைரிய மூட்டிக்கொண்டிருந்தார். என்னதானிருந்தாலும் ……அவர்…………

(செல்லம்மா விம்மி அழுது விட்டாள் பிறகு நிதானமடைந்து……)

தர்மகர்த்தாவுக்கு ஒரு பிள்ளை. அந்தப் பிள்ளைதான் என்னைக் கூண்டிலே நிறுத்திய சுந்தரம். ஆள் அழகன்தான், அழகாயிருந்தால் எனக்கென்ன ……என் வீட்டோடு ஆயிரந் தடவை நடப்பான். சைக்கிளில் செல்வான்……குதிரை வண்டியில் திண்டுபோட்டு சாய்ந்து கொண்டு வண்டியை அவனே ஓட்டிக்கொண்டு போவான், நான் அவனை சட்டைசெய்வதே கிடையாது. அவன் இளமை மட்டும் என்னிடம் குறும்பு செய்ய ஆரம்பித்தது அடிக்கடி நான் தர்மகர்த்தாவின் வீட்டுக்குச் செல்வேன். அவர் மனைவியோடு பேசிக்கொண்டிருப்பேன். சுந்தரத்தின் நிலைமையைத் தெரிந்துகொண்டு அதையும் நிறுத்திவிட்டேன்.

ஒரு நாள்……ஆம்……அதுதான் நான் தர்மகர்த்தா வீட்டுக்குப் போன கடைசி நாள……நான் திரும்பி வரும்போது, தோட்டத்தில் நின்ற சுந்தரம், “புருஷன் திரும்பி வருவான் என்று வாழ்வைக் கெடுத்துக் கொள்கிறாய்?” என்று ஜாடையாகச் சொன்னான். என் உடல் நடுங்கிற்று. ஓட்டமும் நடையுமாக வீட்டையடைந்தேன்.

சுந்தரம் சொன்ன அந்த வார்த்தைகள் மட்டும் என் இருதயத்தைப் பிளந்துகொண்டிருந்தன. புருஷன் திரும்பி வருவான்…………” ஐயோ எவ்வளவு பெரிய சூறாவளி என் மனதைச் சூழ்ந்து கொண்டது தெரியுமா?…………(செல்லமமாவின் கண்கள் சிவப்பேறின. ஆத்திரத்தோடு பேச்சைத் தொடர்ந்தாள்) இரவு பத்துமணி இருக்கும். தூக்கமே வரவில்லை. சுந்தரம் ஏனப்படிச் சொன்னான் என்பதைக்கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் என் உள்ளத்தில் அலைகளாய் மோதின. கதவு தட்டும் சப்தம் கேட்டது. கதவைத் திறந்தேன். சுந்தரம் உள்ளே நுழைந்தான். என்னால் பேச முடியவில்லை. அசைவற்று நின்றேன். என்னிடம் ஒரு புத்தகத்தை நீட்டினான். **காதலோ காதல்** என்ற புத்தகம்தான் அது! உங்கள் முன் இருக்கிற அதே புத்தகம். அறிந்து கொண்டேன் அவன் ஆவலை!……ஒரு நூறு ரூபாய் நோட்டையும் எடுத்துக் காட்டினான். நான் சமாதான முறையில் “கல்யாணமான ஒரு பெண்ணை………”என்று ஆரம்பிப்பதற்குள்………“கணவன் தான் இனி வரமாட்டானே” என்று கிண்டலாய் இழுத்துப் பேசினான். “உன் காதல் உண்மையானால் என் கணவன் கதையைச்சொல்லு” என்றேன். அப்படிக்கேள் என்று ஆரம்பித்தான் சுந்தரம்.

“ஒருநாள் இரவு சுமார் ஒன்பது மணிக்கு நானும், அப்பாவும்-அவர் படுக்கையறையில் ஈஸ்வரன் கோயிலில் களவாடிய நகைகளைப் பிரித்து மதிப்பு போட்டுக் கொண்டிருந்தோம். அந்த நேரத்தில் உன் கணவன் பால் சொம்புடன் உள்ளே நுழைந்தான். என் தந்தை திடுக்கிட்டு திருட்டு வெளியாகி விடும் என்ற பயத்தில் துப்பாக்கியை எடுத்து நீட்டினார். நான் தடுத்தும் பயனில்லை, உன் கணவன் பிணமானான்.” இதைக் கூறி முடித்தான் சுந்தரம்.

தர்மகர்த்தா அன்று-என் அத்தானை போலீஸ் தேடுகிறது என்று கூறிய பொழுதாவது அழுதேன், புலம்பினேன். சுந்தரம் என் கணவரின் முடிவைச் சொன்ன பிறகு நான் மரமாக நின்றுவிட்டேன் சுந்தரம் என்னைப் பிடித்து உலுக்கினான். “செல்லம்மா! எதற்கும் அஞ்சாதே! நானிருக்கிறேன், உன்னைக் காப்பாற்ற! உன்னையடையவேண்டுமென்பதற்காக பெரிய ரகசியத்தையே வெளியிட்டு விட்டேன். நீ இணங்காவிடில் ……இதோ……இந்த துப்பாக்கியால்………” என்று கூறிக் கொண்டே துப்பாக்கியை எடுத்து தன் நெஞ்சுக்கு நேரே பிடித்தான். “சுந்தரம் சற்று பொறு! ஒரு அடிமைக்காக உயிர் விடாதே உன் இஷ்டப்படி நான் நடக்கிறேன். துப்பாக்கியை இப்படிக்கொடு, என்று அதை வாங்கிக்கொண்டேன். என் மானத்தை மிதித்துத் துவைக்கத் தயாராக நின்று கொண்டிருந்தான் சுந்தரம். நானே தற்கொலை செய்துகொள்ளத் துணிந்தேன். ஆனால் என் இருதயத்தில் இருக்கும் என் அத்தானின் உருவத்தை அந்த குண்டு சிதைக்கத்தான் செய்யும்……வேண்டாம் அந்த சுந்தரத்தின் இருதயத்தில் கிணிக்கப்பட்டிருக்கும் செல்லம்மாளை சிதைத்து விடுவதுதான் சரி

( 7-ம் பக்கத் தொடர்ச்சி )

என்று துப்பாக்கியை நேரே பிடித்தேன். துப்பாக்கி தொட்டறியாத நான் ஒரு துரோகியைக் கொல்ல குறிபார்த்தேன். அப்பொழுதுதான் அந்த ஈரமற்ற நெஞ்சுடைய சுந்தரம் எங்கே ஒரு முத்தம் எனத் தாவினன். என்னை யறியாமலேயே வெடித்துவிட்ட குண்டு அவன் இருதயத்தை முத்தமிட்டது. பளிச்சென்ற ஒரு மின்னல்!...........வளர்த்துவானேன் நான்தான் சுந்தரத்தைக் கொன்றேன். நான் கொலைகாரி தான்!...............''

செல்லம்மா வாக்குமூலம் முடிந்தது. ''கற்பைக் காப்பாற்றிக் கொள்ளவே அவள் கொலை செய்ய நேர்ந்தது.........உண்மையில் அவள் கொலைகாரியல்ல...'' என்ற தீர்ப்பை நீதிபதி வழங்கினர். செல்லம்மாளுக்கு விடுதலை! நல்ல தீர்ப்புதான்!...... ஆனல்......அதோ 'அத்தான் அத்தான்' என்று அலறிக் கொண்டு கொந்தளிக்கும் கடலை நோக்கி செல்லம்மா ஓடிக் கொண்டிருக்கிருள். அவளை யார் தடுக்கமுடியும்?

ஒரே நாள் மட்டும்! 2-2-48 திங்கள் மாலை 6-30-க்கு

# தூக்குமேடை

கும்பகோணம் அரண்மனைத் தோட்டத்தில்

திராவிடன் ஆசிரியர், திரு, N. V. நடராசன் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள்:- மு. கருணாநிதி, N. S. இளங்கோ, புலவர் குழந்தையா, N. S. சண்முகவடிவேல், A. மருதகாசி, க. சுந்தரன், கருணை. எம். ஜமால், P. S. சிவம், சு. ராமனுஜன், நெடுமாறன், குருசாமி, ஆனந்தன், S. மணி, ஜீவன், தோழியர் ராஜம் மற்றும் இயக்க நண்பர்களுநடிக்கிருர்கள்

## திருந்திய மறுமணம்.

திருவாரூர் கா. ராமையா-சௌந்தரவல்லி திருமணம் திரு. R. V. கோபால் தலைமையில் 25-1-48 காலை திராவிடர் கழகத்தில் நடைபெற்றது, அதுசமயம் அரங்காசு, மு. கருணநிதி, புலவர் குழந்தையா, கருணை எம் ஜமால், ராதாமணளன் சொற்பொழிவாற்றினர்கள் நன்கொடையாக முரசொலி,விடுதலைக்கு 1ரூ.கொடுக்கப்பட்டது.

— பாரதி தாசன் —

## குயில்

கவிதை இதழ்—மாத வெளியீடு.

கவிஞரின் தேனூறும் கவிதைகள்!

இனிய உரை நடைகள்!

இளம் எழுத்தாளர்க்கு — — இலக்கியப் போட்டிப்பரிசு

இன்ன பிற சுவை மிகு பகுதிகள் உண்டு. விலை 6 அணா.

குயில், பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி.

## ஸ்ரீ தேவி நாடக சபா

முகாம்: கும்பகோணம்.

28—1—48 முதல் மகத்தான 3-வது வாரமாக

# பராசக்தி

நாடகம் நடைபெறுகிறது.

கதை. வசனம், பாடல்: பாவலர் M. S. பாலசுந்தரம்.

தினசரி இரவு 10 மணி — ஞாயிறு. புதன் மாலை 7 மணி

உரிமையாளர், K. N. ரெத்தினம்.

அழகு கெடாமல் சொற்களை அள்ளி வீசும்

## திருவாரூர் சேவியர் ஒலி பெருக்கி

தலைவர்கள் ''தலைசிறந்த ஒலி பரப்பு சாதனம்'' என்கின்றனர்

— பாடகர்கள் பாராட்டுகின்றனர் —

**A. M. சேவியர்,**

ரேடியோ & டாக்கி இஞ்சினியர், திருவாரூர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: மு. கருணநிதி, திருவாரூர். அச்சிடுபவர்: கருணை. எம். ஜமால், கருணநிதி (மின்னியக்கப்) பதிப்பகம், விஜயபுரம்.